2020 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

129—

ஒளி உமிழ்வு இருமுனைய மின்விளக்குகள்

***56200—திருமதி பி. கீதா ஜீவன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி தொகுதியில் உள்ள பழைய மீன்பிடி துறைமுகத்தில் ஒளி உமிழ்வு இருமுனைய (LED) மின்விளக்குகள் பொருத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி தொகுதியில் உள்ள தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக வளாகத்தில் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுக மேலாண்மை சங்கத்தின் நிதியிலிருந்து ரூ.1.50 இலட்சம் செலவில் ஒளி உமிழ்வு இருமுனைய மின்விளக்குகள் 45 எண்ணம் 60 வாட்ஸ் திறன் கொண்ட மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கும், கழகப் பொருளாளர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய இந்தக் கேள்வி மூன்றாண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் கொடுத்தது. இப்போது அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது;

அது அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மீன்பிடித் துறைமுகத்தில் cycle shed சிதிலமடைந்து, பராமரிப்பின்றி உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே, மீன்பிடித் துறைமுகத்திலுள்ள cycle shed–ஐயும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே இருக்கக்கூடிய மீனவர்களின் நலனுக்காக அமைத்துத் தர வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், திரேஸ்புரம் கடற்கரையில் உள்ள படகு அணைதளம் உடைந்து, சிதிலமடைந்து பயணிக்க முடியாத நிலையில் சாலையில் உள்ளதால் மீன் சுமந்து செல்லும் வண்டிகூட செல்ல முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அதையும் சீர்படுத்தித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, திரேஸ்புரம் கடற்கரைப் பகுதியில், படகுகள் கட்டி வைக்கும் இடத்தில் மண் திட்டு உருவாகி, படகுகளை நிறுத்தி வைக்க இயலாத ஒரு நிலையும் இருக்கிறது. ஆகவே, அந்தக் கடற்கரைப் பகுதியில் படகு நிறுத்துமிடத்தில் உள்ள மண் திட்டை ஆழப்படுத்தித் தந்திடுமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, திரேஸ்புரம் கடற்கரைப் பகுதியை நீட்டித்துத் தர வேண்டும் என ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். தூண்டில் வளைவை 285 மீட்டர் அளவுக்குக் கூடுதலாக நீட்டித்துத் தர வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தைப் பொறுத்தவரை, 12 கோடி ரூபாய் செலவில் அது நவீனமயமாக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. 35 கோடியே 75 இலட்சம் ரூபாய்க்கான அடிப்படை வசதிகள் குறித்து அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. விரைவில் அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் சொல்கின்ற எல்லாப் பிரச்சினைகளும் அதில் cover ஆகிவிடும். அதில் cover ஆகாமல், வேறு ஏதாவது பிரச்சினை இருந்தால், எங்களிடம் சொல்லுங்கள். உங்களுடைய பிரச்சினையையும் கவனிக்கின்ற அரசு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

2020 மார்ச் 19]

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பணி, அங்கே இருக்கக்கூடிய பிரச்சினைகளை அரசுக்குத் தெரிவிப்பதுதான். ஆகவே, எங்களுடைய கடமையை நாங்கள் சரியாகச் செய்து கொண்டிருக்கிறோம். அடுத்ததாக, கடந்த முறை கேள்வி நேரத்தில், இனிகோ நகரில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் அமைக்கக் கோரிக்கை வைத்தேன். இனிகோ நகர் கடற்கரையில் தூண்டில் வளைவுதான் அமைத்துத்தரப்பட வேண்டும் என்று நம்முடைய மீனவப் பெருமக்கள் கோரிக்கை வைக்கின்றார்கள். ஆகவே, இனிகோ நகர் கடற்கரையிலும் மீன் வளத் துறையின்மூலம் தூண்டில் வளைவு அமைத்துத்தர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி, ஒட்டுமொத்தமாக 35 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் எல்லா அடிப்படை வசதிகளும், அதில் தூண்டில் வளைவு நீட்டிப்பு உட்பட கரை அணைதளம், அதேபோல் shore facilities என்று சொல்லக்கூடிய கரையில் செய்யக்கூடிய அடிப்படை வசதிகள் போன்ற அனைத்தும் cover ஆகியுள்ளன. அதில் cover ஆகி வராதது எதுவோ, முழுமையாக இந்த வருடம் அதுகுறித்தும் ஆய்வு செய்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது குறித்து விரிவான அறிக்கைகள் பெறப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

130—

மகளிர் கல்லூரி

***51553—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—